# இலங்கை கொள்வனவு முகாமையாளர் சுட்டெண்

புள்ளிவிபரத் திணைக்களம் இலங்கை மத்திய வங்கி

## கொள்வனவு முகாமையாளர் சுட்டெண் - தயாரிப்பு மற்றும் பணிகள் என்பனவற்றின் பெறுபேறுகள்

முக்கிய விடயங்கள்:


2019 நவெம்பரில் தயாரிப்பு கொள்வனவு முகாமையாளர் சுட்டெண் விரிவடைந்து 56.0 சுட்டெண் பெறுமதியொன்றினை பதிவுசெய்தமைக்கு புதிய கட்டளைகள், உற்பத்தி மற்றும் தொழில்நிலையில் ஏற்பட்ட விரிவாக்கமே முக்கிய காரணமாக அமைந்தது.

**கொ.மு.சு**
**சுட்டெண் பெறுமதி**
**56.0**

2019 ஒத்தோபருடன் ஒப்பிடுகையில் 1.6 சுட்டெண் புள்ளிகள் கொண்ட வீழ்ச்சி

அனைத்து துணைச் சுட்டெண்களும் விரிவாக்கமொன்றினை எடுத்துக்காட்டிய போதும், 2019 ஒத்தோபருடன் ஒப்பிடுகையில் அவை மெதுவான வேகத்திலேயே காணப்பட்டன. புதிய கட்டளைகளும் உற்பத்தியும் மெதுவான வேகத்தில் விரிவடைந்தமைக்கு புடவைகள் மற்றும் அணியும் ஆடைகள் தயாரிப்பில் காணப்பட்ட மெதுவான தன்மை முக்கிய காரணமாக அமைந்தது. இவ்வபிவிருத்திகளுடன் இசைந்துசெல்லும் விதத்தில் தொழில்நிலையும் சிறிதளவால் வீழ்ச்சியடைந்தது.

கொள்வனவு முகாமையாளர் சுட்டெண் - தயாரிப்பு




மூலம்: இலங்கை மத்திய வங்கி

புதிய கட்டளைகளும் உற்பத்தியும் மெதுவான வேகத்தில் விரிவடைந்த போதும், கொள்வனவுகளின் இருப்புக்கள் உயர்ந்த வீதத்தில் விரிவடைந்தமைக்கு, எதிர்வரும் நத்தார் மற்றும் புத்தாண்டு விடுமுறைகளின் விளைவாக நிரம்பல் தாமதமடையக்கூடும் என்ற எதிர்பார்ப்பின் காரணமாக எதிர்காலத் தேவைப்பாடுகளைப் பூர்த்திசெய்யும் விதத்தில் இருப்புக்களை அதிகரித்துக் கொள்ளும் எண்ணம் காரணமாக அமைந்தது. மேலும், நிரம்பலர் விநியோக நேரம் நடுநிலைமட்டத்தினை அடைந்து முன்னைய மாதத்தின் அதே மட்டத்தில் தொடர்ந்தும் காணப்படுகின்றமையினை எடுத்துக்காட்டியது.

| மாறி | ஒத் | நவெ | +/- | சுருக்கம் |
|---|---|---|---|---|
| **கொ.மு.சு** | **57.6** | **56.0** | **-** | **அதிகரிப்பு, மெதுவான வீதத்தில்** |
| **கொ.மு.சு துணைச்சுட்டெண்கள்** | | | | |
| புதிய கட்டளைகள் | 59.7 | 57.1 | - | அதிகரிப்பு, மெதுவான வீதத்தில் |
| உற்பத்தி | 60.2 | 57.1 | - | அதிகரிப்பு, மெதுவான வீதத்தில் |
| தொழில்நிலை | 58.2 | 57.7 | - | அதிகரிப்பு, மெதுவான வீதத்தில் |
| கொள்வனவுகளின் இருப்பு | 54.1 | 55.6 | + | அதிகரிப்பு, உயர்ந்தவீதத்தில் |
| நிரம்பலாளர்களின் விநியோகிக்கும் நேரம் | 50.5 | 50.0 | - | நீட்சியிலிருந்து நடுத்தரத்திற்கு |

மூலம்: இலங்கை மத்திய வங்கி

நடுநிலையில் காணப்பட்ட நிரம்பலர் விநியோக நேரம் தவிர்ந்த, கொள்வனவு முகாமையாளர் சுட்டெண் தயாரிப்பின் அனைத்து துணைச் சுட்டெண்களும் 50.0 மட்ட (நடுநிலையான) அளவினை விஞ்சி 2019 நவெம்பர் மாதகாலப்பகுதியில் தயாரிப்பு நடவடிக்கைகளின் ஒட்டுமொத்த விரிவாக்கத்தினை சமிக்ஞைப்படுத்தின.

### *உலக தோற்றப்பாடு: தயாரிப்பு கொ.மு.சு*

2019 நவெம்பரில் உலக தயாரிப்பு கொ.மு.சு 50.3 கொண்ட பெறுமதியொன்றினைப் பதிவுசெய்தது. இது 2019 ஒத்தோபரிலிருந்து 0.5 சுட்டெண் புள்ளிகளைக் கொண்ட அதிகரிப்பொன்றாகக் காணப்படுகிறது.

2019 நவெம்பரில் ஐக்கிய இராச்சியம் மற்றும் ருசியாவின் தயாரிப்பு கொ.மு.சு மெதுவடைந்த வேளையில் இந்தியா, சிங்கப்பூர், சீனா, ஐக்கிய அமெரிக்கா மற்றும் யூரோ வலயங்களின் அச்சுட்டெண் மேம்பட்டது.

*மூலம்: மார்க்கிட்[1], திசெம்பர் 13, 2019 இல் உள்ளவாறு*

*1 மார்க்கிட் நிறுவனமானது நிதியியல் தரவுப் பணிகள் தொடர்பான முன்னிலையான உலக பன்முகத்தன்மை வாய்ந்த வழங்குநராகும். இது உலக கொ.மு.சு தொகுப்பாளராக அடையாளங்காணப்படுவதுடன் யூரோ வலயம் போன்ற முக்கிய பிரதேசங்கள் உள்ளடங்கலாக 30க்கும் மேற்பட்ட நாடுகளுக்கு கொ.மு.சு இனை தொகுக்கின்றது.*

**2019 நவெம்பரில் பணிகள் கொள்வனவு முகாமையாளர் சுட்டெண் 16 மாதங்களிலேயே மிக உயர்ந்த மட்டமான 57.4 சுட்டெண் புள்ளிகளை அடைந்தமைக்கு,** புதிய வியாபாரங்கள், வியாபார நடவடிக்கைகள் மற்றும் நடவடிக்கைகளுக்கான எதிர்பார்ப்புக்களில் ஏற்பட்ட விரிவாக்கம் முக்கிய ஆதரவாக அமைந்தது.

2015 யூனின் பின்னர் மிக உயர்ந்த சுட்டெண் பெறுமதியினை ஏற்படுத்திய நடவடிக்கைக்கான எதிர்பார்ப்புக்களில் வலுவான வளர்ச்சியொன்று அவதானிக்கப்பட்டது. பதிலிறுப்பாளர்கள், அரசியல் துறையில் பெருமளவு உறுதிப்பாட்டினை தாங்கள் எதிர்பார்க்கின்ற அதேவேளையில் புதிய வரித்திருத்தங்கள் அவர்களது வியாபார வளர்ச்சிக்கு சாதகமானதொரு விதத்தில் பக்கபலமாக விளங்கும் என்பதனை எடுத்துக்காட்டியிருக்கின்றனர். மேலும், எதிர்வரும் சுற்றுலாவிற்கான உச்ச பருவகாலம், பண்டிகைக் காலம் மற்றும் விடுமுறைக் காலம் என்பன எதிர்வரும் காலப்பகுதியில் அவர்களது வியாபாரங்களுக்கு சாதகமான விதத்தில் பங்களிக்குமென எதிர்பார்க்கப்படுகிறது.

புதிய வியாபாரங்கள் முன்னைய மாதத்துடன் ஒப்பிடுகையில் மெதுவான வீதத்தில் அதிகரித்த வேளையில், வியாபார நடவடிக்கைகள் புதிய தொழில்நுட்பங்களை அடிப்படையாகக் கொண்ட விரிவாக்கங்களுடன் சேர்ந்து அதிகரித்தன. வியாபார நடவடிக்கைகளில் ஏற்பட்ட அதிகரிப்பினை தங்குமிட வசதிகள் மற்றும் நிதியியல் பணிகள் துறைகளில் அவதானிக்க முடிந்தது.


| மாறி | ஒத் | நவெ | +/- | சுருக்கம் |
|---|---|---|---|---|
| **கொ.மு.சு** | **56.9** | **57.4** | **+** | **அதிகரிப்பு, உயர்ந்த வீதத்தில்** |
| **கொ.மு.சு துணைச்சுட்டெண்கள்** | | | | |
| புதிய வியாபாரங்கள் | 61.5 | 52.2 | - | அதிகரிப்பு,மெதுவான வீதத்தில் |
| வியாபார நடவடிக்கைகள் | 59.0 | 59.0 | = | அதிகரிப்பு, அதே வீதத்தில் |
| தொழில்நிலை | 44.0 | 49.4 | - | வீழ்ச்சி, மெதுவான வீதத்தில் |
| நிலுவையிலுள்ள பணிகள் | 51.6 | 48.1 | - | வீழ்ச்சி, அதிகரிப்பிலிருந்து |
| நடவடிக்கைகளுக்கான எதிர்பார்ப்பு | 68.2 | 78.1 | + | அதிகரிப்பு, உயர்ந்த வீதத்தில் |

மூலம்: இலங்கை மத்திய வங்கி

தங்குமிட வசதி, மொத்த விற்பனை/ சில்லறை வர்த்தம் மற்றும் தனியாள் பணிகள் போன்ற துறைகளின் தொழில்நிலையில் அதிகரிப்புக் காணப்பட்ட போதும் பணிகள் துறையின் தொழில்நிலை மீதான சுட்டெண் தொடர்ந்தும் எட்டாவது மாதமாக 50.0 தொடக்க அளவு மட்டத்திற்கும் கீழேயே காணப்பட்டது. நிலுவையிலுள்ள வேலையும் 2019 ஒத்தோபருடன் ஒப்பிடுகையில் நவெம்பரில் வீழ்ச்சியடைந்தது.

**கொ.மு.சு**
**சுட்டெண் பெறுமதி**
**57.4**

**2019 ஒத்தோபருடன் ஒப்பிடுகையில் 0.5 சுட்டெண் புள்ளிகளைக் கொண்ட அதிகரிப்பு**




மூலம்: இலங்கை மத்திய வங்கி

### *உலக தோற்றப்பாடு: பணிகள் கொ.மு.சு*

2019 நவெம்பரில் உலகளாவிய பணிகள் கொ.மு.சுட்டெண் மூன்று மாதங்களிலே உயர்ந்த மட்டமான 51.6 இற்கு அதிகரித்தது.

இந்தியா, ஐக்கிய அமெரிக்கா, சீனா மற்றும் யப்பான் என்பனவற்றின் பணிகள் கொ.மு.சு 2019 ஒத்தோபருடன் ஒப்பிடுகையில் நவெம்பரில் அவற்றின் பணிகள் துறைகள் மேம்பட்டமையினை எடுத்துக்காட்டிய வேளையில் ஐக்கிய இராச்சியம் பணிகள் நடவடிக்கைகளில் வீழ்ச்சியொன்றை எடுத்துக்காட்டியது.

*(மூலம்: மார்க்கிட்[1], திசெம்பர் 13, 2019 இல் உள்ளவாறு)*

**தொழில்நுட்பக் குறிப்பு:**

**சுட்டெண்**

கொ.மு.சுட்டெண்ணானது "வியாபித்தல் சுட்டெண்ணாக" கணிக்கப்படுகிறது. இங்கு இது 0 மற்றும் 100 இற்குமிடையிலான பெறுமதியினைக் கொண்டிருக்குமிடத்து.

கொ.மு.சு=50 மாதத்திற்கு மாத அடிப்படையில் துறையானது நடுநிலையில் காணப்படுகிறது.
கொ.மு.சு >50 மாதத்திற்கு மாத அடிப்படையில் துறையானது பொதுவாக விரிவடைகிறது.
கொ.மு.சு <50 மாதத்திற்கு மாத அடிப்படையில் துறையானது பொதுவாக வீழ்ச்சியடைகிறது.

**மாதிரி**

மாதிரிக் கட்டமைப்பானது ஊ.சே.நிதியத் திணைக்களத்திலிருந்து பெறப்பட்ட மேல் மாகாணத்தில் அமைந்துள்ள பாரிய கம்பனிகளின் பட்டியலை அடிப்படையாகக் கொண்டுள்ளது. தயாரிப்பு மற்றும் பணிகள் நடவடிக்கைகளுக்கான மாதிரிகள் ஒவ்வொன்றிற்குமான குறைந்தபட்சம் 100 பதிலிறுப்புக்களைக் கொண்ட இலக்குகளுடன் மொ.உ.உற்பத்திகளின் துறைவாரியான பங்குகளின் அடிப்படையில் தெரிவுசெய்யப்பட்டன.

**மாறிகளின் வரைவிலக்கணங்கள்:**

| | | |
|---|---|---|
| தொழில்நிலை | : | நிறுவனத்தில் பணியாற்றும் அலுவலர்களின் எண்ணிக்கை |
| கொள்வனவுகளின் இருப்பு | : | உற்பத்திக்குப் பயன்படுத்துவதற்காக கொள்வனவு செய்யப்பட்டு களஞ்சியசாலையில் வைக்கப்பட்டுள்ள மூலப்பொருட்கள் |
| நிரம்பலர் வழங்கல் நேரம் | : | கட்டளை வழங்கப்பட்டமைக்கும் நிரம்பலர்களினால் பொருட்கள் வழங்கப்பட்டமைக்குமிடையிலான நேர வேறுபாடு |
| நிலுவையிலுள்ள பணிகள் | : | வியாபார நடவடிக்கையின் அதிகரித்த பாய்ச்சலின் காரணமாக பூர்த்தி செய்யப்படாத கட்டளைகள் |

மற்றைய மாறிகள் சுயமான விளக்கத்தினைக் கொண்டுள்ளன.